உ
சிவமயம்.

Registered as a News Paper in Ceylon [RBN 9/809-69]

விலை சதம் 15

'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க'

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க'

# சைவ காவலன்

மாதம் இருமுறை வெளிவரும் சைவ வெளியீடு

சௌமிய ஞூ ஐப்பசி மீ 30உ சனிக்கிழமை

மலர் 1 | அகில இலங்கைச் சைவ அநுட்டான பாதுகாப்புச் சபை, தெல்லிப்பழை | [15-11-69] | இதழ் 5

# நவீனக் கொள்கைகள் வைதீக சைவத்திற்குப் பிரமாணமாகா.

'சுருதி, சிவாகமம், சுவானுபூதி என்ற மூன்றற்கும் ஒப்பமுடிந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டது சைவசித்தாந்தம். சித்தாந்த அநுபவ ஞானிகள் வழிவந்த கருத்தாராய்ச்சி முறைகளே சித்தாந்த விளக்கத்துக்குப் பிரமாணமாவன. பிறதுறைகளில் நாம் பெறும் அறிவுகள் அதற்குப் பிரமாணமாகமாட்டா.

சித்தாந்த அநுபவ ஞானிகள் பதி, பசு, பாசங்களைப் பற்றி எவ்வகையிற் சொன்னார்கள்; எவ்வளவு சொன்னார்கள்? என்ற ஆராய்ச்சி அவசியமானது. அவர்கள் கூறிய அவ்வகையில் அவ்வளவுக்குள் மரபு வழுவாது நின்று சித்தாந்த விளக்கம் மேற்கொள்ளப்படவேண்டுவது. அவனருளே கண்ணாகக் காணாதவிடத்துச் சிவனருள் விளக்கம் ஏற்படாது என்றார் அப்பர் சுவாமிகள். அங்ஙனமே சித்தாந்த மரபே கண்ணாகக் காணாதவிடத்துச் சித்தாந்த விளக்கம் ஏற்படமாட்டாது; மாக்சீய தத்துவக் கண்கொண்டு திருமுறைகளை நோக்குவோர் தேவார திருவாசகங்கள், ஏன்? திருமந்திரமுங்கூட, பொதுவுடைமைக் கருத்துக்களையே போதிக்கின்றன என்று சொல்ல முன் வருகின்றார்கள். பொருளனைத்தும் சிவனுடைமை என்கின்றன திருமுறைகள். அவை மக்களுடைமை என்கின்றது மாக்சீயம். இனி, காந்தீய நோக்கிற் பெரிய புராணத்தை நோக்குவோர் அது சர்வோதயமே போதிக்கின்றதெனச் சாதிக்கப் பார்க்கின்றார்கள். தம் நிலையில் விட்டுக்கொடாமல் நின்று எல்லோர்க்கும் சுபீக்ஷம் விளைய ஒவ்வொருவர் ஒவ்வோர் காலத்தில் தெய்வீக நிலைபெற்றமையை விளக்குவது பெரியபுராணம் எல்லோர்க்குமாக எல்லோரும் விட்டுக் கொடுப்பது காந்தீயசர்வோதயம். சகவாழ்வுக் கொள்கையிலும் அனைத்துலகப் பண்பாட்டொருமைக் கொள்கையிலும் தழும்பி நிற்போர் சைவசமய கருத்துக்களைத் தாம் வேண்டிய அளவுக்குத் தலைதட்டிக் கொள்ள முயல்கின்றார்கள். இக்கொள்கைகள் லௌகீகவாழ்விற் காலூன்றியவை. சித்தாந்த சமயம் தெய்வீக வாழ்விற் காலூன்றியது. இங்ஙனமாதலின் இவையனைத்தும் சைவ சித்தாந்தத்தின் மகிமைக்குப் பேரிழப்பாகும். இவற்றினூடாகக் காணுங் காட்சியில் சைவ சமயத்தின் சாயலைத் தானுங் கண்டுவிட முடியாது.

லௌகீகமான உலகியல் விளக்கங்களும் அநுபவங்களும் வேறு. ஆத்மீகமான சைவ சித்தாந்த சமய விளக்கங்களும் அநுபவங்களும் வேறு. உலகியல் விளக்கத்துக்குரிய சகலவித சம்பிரதாயங்களுக்கும் அனைத்துவித அறிவியல் வகைகளுக்கும் அப்பாற்பட்டது சைவசித்தாந்தம். உலகியல் தேவைகளுக்காகச் சைவசித்தாந்த சமயத்தைத் தொட்டிழுத்தல் அதனை மாசுபடுத்துவதைத் தவிர வேறெப் பயனையும் தந்துவிடாது என்பது உண்மையில் உண்மை. நவீன சைவர்கள் இதனைக் கருத்திற் கொள்ளுதல் நாட்டுக்கும் தமக்கும் நலந்தரும் என்பதை உணர்வார்களாக.

## மரணச்சடங்கில் திருமுறை ஓதுதல்

உடம்பும் உயிரும் ஒன்று சேர்ந்து இயங்கும்பொழுதுதான் எமது உலக வாழ்க்கை உண்டாகின்றது. இறைவன் எமக்கு உடம்பைத்தந்தது உயிரின் நன்மைக்காகவே. மாயை உலகத்தில் உயிரைத் தோய்த்து அதன் கண்ணுள்ள மலத்தை நீக்கவே. இருக்கிறது ஆகையால் உடம்பிலும்பார்க்க உயிரே பிரதானமானது 'வாழ்வாவது' மாயம் எமது 'உடல் மண்ணாவது திண்ணம்' 'எப்போதாகிலும் கூற்றுவன் வருவான்' என்பவற்றைத் தினமும் நினைந்து வாழ்வோமாகில் எமது வாழ்க்கை பேரின்பத்தையே நாடிநிற்கும். பேரின்பத்தை மறந்து சிற்றின்ப வாழ்க்கையில் தமது வாணாளைக் கழித்தவர்களும் தமது கருவிகளெல்லாம் ஒடுங்கி வாழ்க்கையின் அந்திய காலம் வரும்பொழுது உயிருக்கு நன்மை பயக்கும் இறைவன் கருணையை வேண்டி அவன் நாமத்தைப் போற்றுந் திருப்பாடல்களைக் கேட்க விரும்புவதையும், அக்காலத்திற் திருப்பாடல்கள் பாடப்படுவதையுங் காண்கின்றோம்.

மனிதனின் வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் எல்லாப் புலன்களுமொடுங்கும் வேளையில் செவிப்புலன்தான் ஈற்றில் ஒடுங்குகின்றது. இதை நாம் அனுபவத்திலும் கண்டுள்ளோம். செவிப்புலன் வழியாக ஆன்மாவின் இவ்வுலகப் பற்றை நீக்கவும், ஆன்மா ஈடேறுவதற்குதவியாகிய பரம்பொருள்மேல் பற்றுவைக்கும் பொருட்டுமே இறைவனின் திருநாமத்தைக் கூறும் திருப்பாக்களைப் படிப்பது. இதுகாரணம் பற்றியே ஆன்மா உடம்பை விட்டு நீங்கும் வேளையில், மரிப்போரின் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைப் பெரியோர் ஓதுகின்றனர். திருப்பாடல்களை அந்திய காலத்திற் படிப்பதால் மானுடப் பிறவியெடுத்து நற்பலனை வாழ்க்கையில் அடையாமலிருந்துள்ள ஆன்மாவும் அவ்வாழ்வின் அந்திய காலத்திலாவது ஓரளவில் நற்பலனைப் பெற்று ஈடேற முடியும்.

கருடபுராணத்திற் கூறியவாறு ஆயுள் முடிந்த சீவனை இயமதூதர்கள் பிடித்துக் காற்று ரூபமாகிய தேகத்திலடைத்து இயமபுரிக்குக் கொண்டு போய்த் திரும்ப அச்சீவனை அது இருந்த மனையினண்டை கொண்டுவந்துவிட்டுப் பன்னிரண்டு நாட்கள் கழிந்தபின்னர் மறுபடியும் அச்சீவனைச் சூக்கும சரீரத்துடன் இயமபுரிக்குக் கொண்டு செல்வார்கள். தூல சரீரத்தைவிட்டுச் சூக்கும சரீரமெடுத்த ஆன்மாக்கள் உடனே பிறவிகளெடுப்பதுமுண்டு, அல்லது தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்றவாறு சுவர்க்கத்திலும் நரகத்திலும் இன்ப துன்பங்களை அனுபவித்துக் கழிந்தபின் சில நாட்களில் மறுபிறவிகளெடுப்பதுமுண்டு, சில ஆன்மாக்கள் வெகுகாலஞ் சென்றபின் மறுபிறவிகளெடுப்பதுமுண்டு.

தீர்க்கதரிசிகளும், சமய அறிவாற்றலுள்ளவர்களுமாகிய எம்முன்னோரால் வகுக்கப்பட்ட அந்திமக் கிரியைகள் யாவுந் தூலசரீரத்தை விட்டு நீங்கிய ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டேயாம் என்பர். அவ் ஆன்மாக்கள் என்ன நிலையில் நின்றபோதிலும், விதிமுறைப்படி நாம் செய்வன அவற்றைச் சென்றடையும். இவற்றின் ஆழ்ந்த சமயக் கருத்துக்களை நன்கு அறியாதோர் இவற்றையெல்லாம் மேல்நாட்டு நாகரீகக் கண்ணாடி கொண்டு பார்த்து மூடநம்பிக்கையெனக் கருதி வெறுத்துத்தள்ளிப்

(6ம் பக்கம் பார்க்க)

உ

திருச்சிற்றம்பலம்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.
— தேவாரம்.

# சைவ காவலன்

சௌமிய ௵ ஐப்பசி மீ 30 உ

மலர் 1] அகில இலங்கை [இதழ் 5
சைவஅனுட்டான பாதுகாப்புச்சபை, தெல்லிப்பளை.

## சிவனடியாரை இகழ்தல்

விபூதி ருத்திராட்சமுதலிய திருவேடமுடையாரும், சங்கிதா மந்திரநியாசம் முதலிய நியாசங்கள் வாயிலாகச் சிவோகம் பாவனை செய்வோரும், அகப்பூசை புறப்பூசை செய்வோரும், தம்மின் இரண்டற இயைந்த சிவத்தோடு கலந்து நிற்போரும், சிவமேயாவர். வேடம் பாவனை செயல் தன்மை என்னும் நான்கினுள் ஒன்று அமையப்பெற்றவராய் இருப்பினும் அவரைச் சிவமாகப் பாவித்து வழிபடல் வேண்டும்.

பிறவித்துன்பத்தை நீக்க விரும்பியவர்கள் சிவனடியாரைக் கண்டவுடன், மனிதர் செய்யும் வழிபாட்டை அறிவோமென்று சிவபெருமானே தபோதனரென்னும் உருவத்தைத் தரித்து வந்தாரென்றெண்ணி வணங்கல் வேண்டும். அவர்களைப் பிறர் நிந்திக்கக் கேட்டவர்களும், நிந்தித்தவரும், அதற்குடன் பட்டவரும், நிந்திக்கும்படி ஏவிவிட்டவரும், மனத்தினாலும் காயத்தினாலும் தவறு செய்தவரும், அவர்களைக் கண்டவுடன் இருக்கை விட்டெழாதவரும், அவர்கள் முன் உயர்ந்த ஆசனத்திலிருப்பவரும், சிரித்தல் முதலிய புறக் குற்றங்களைச் செய்தவரும் பெருந்துன்பத்தை அனுபவிப்பார்கள்.

முன்னொரு கற்பத்தில் நந்திகோத்திர முனிவருக்கு ஔரவர் என்னுமொரு புத்திரர் இருந்தார். ஔரவமுனிவர் சுமேடை என்பவளை விவாகம் செய்து சமி என்னும் புத்திரியைப் பெற்றார். தாய் தந்தையர்கள் தமது மகளாகிய சமியை, சௌமிய முனிவருடைய புத்திரனும் சௌனக முனிவரது மாணாக்கனுமாகிய மந்தார முனிவருக்கு விவாகம் செய்து கொடுத்தார்கள். மந்தாரன் தனது தாய் தந்தையரது ஆச்சிரமத்துக்கு மனைவியை அழைத்துச் சென்றான். அவர்கள் காட்டு மார்க்கமாகச் செல்லும் பொழுது விநாயகக் கடவுளது சாரூபத்தைப் பெற்ற புருசுண்டி முனிவர் எதிரே வந்தார். அத்தம்பதிகள் பழைய வினையை அனுபவிக்கும் காலம் நேரிட்டவர்களாய் அம் முனிவரது துதிக் கரத்தையும் தொந்தி வயிற்றையும், குறிய காலையும் பார்த்துச் சிரித்தார்கள். முனிவர் அதைக்கண்டு பெரியோர் முன் செய்யத்தகாத குற்றத்தை என்முன் நீங்கள் செய்தீர்கள். ஆகையால் வன்னி, மந்தாரை என்னும் மரங்கள் ஆவீர்கள் என்று சாபமிட்டனர். அவ்விருவரும் முனிவரை வணங்கி ''யாங்கள் அறிவின்மையால் செய்தகுற்றத்தைப் பொறுத்து அருளுக'' என்று பலமுறை வேண்டினார்கள். அதற்கு முனிவர் சிறிது இரங்கி ''நீங்கள் வன்னி மரமும், மந்தாரமரமுமாக இருக்கும் பொழுது விநாயகக் கடவுள் உங்களிடத்து எழுந்தருளுவர். அப்பொழுது நீங்கள் மேன்மையை அடைந்து இம்மரவடிவு நீங்காமல் கடவுளுக்குரிமை யாவீர்கள் ஆன்மாக்கள் உங்களை வணங்குவார்கள். முடிவில் முத்தி அடைவீர்கள் என்று சொல்லித் தமதாச்சிரமத்தை அடைந்தார். மந்தாரன் மந்தாரமரமாகவும்,சமீ வன்னி மரமாகவும் ஆனார்கள். சௌனக முனிவர் தமது மாணாக்கன் வராமையால் வருந்தி யோக மார்க்கத்தால் அவ் விருவரும் சாபமேற்றமையை அறிந்தார். ஔரவ முனிவரும் அவ்விதமே அறிந்தார். சௌமிய முனிவர் அறிந்து புத்திர சோகத்தால் இறந்தார்.

பின்பு சௌனக முனிவரும் ஔரவ முனிவரும் விநாயகக் கடவுளைத் தியானித்துத் தவம் செய்தார்கள். விநாயகக் கடவுள் தோற்றி அருளினார். சௌனக முனிவர் எழுந்து நமஸ்கரித்துத் தோத்திரம் பண்ணினார். விநாயகக் கடவுள் ''உனக்கு வேண்டிய வரம்யாது'' என்று வினவியருளினார். முனிவர் பின்பும் நமஸ்கரித்து மந்தாரனும் சமீ என்பவளும் தேவரீரது அடியார்களுட் சிறந்த புருசுண்டி முனிவரை அறியாமை காரணமாக அவமதித்தமையால் அவரது சாபத்தை ஏற்றனர். அவ் விருவரது சாபத்தையும் நீக்கியருளுக என்று பிரார்த்தித்தார். விநாயக மூர்த்தி புன்னகை செய்து ''அன்பனே எமது அடியவர்கள் கோபித்துக் கூறினும் உவந்து கூறினும் அவை அவ்வப்பயன்களைக் கொடுத்தேவிடும். அதை ஒருவராலும் நீக்கமுடியாது. வன்னி மந்தாரை என்னும் அவ்விருமரநிழலிலும் யாம் வீற்றிருந்து அடியார்கள் விரும்பிய போகமோட்சங்களை ஈந்தருளுவோம். அவைகளின் பத்திர புஷ்பங்களினால் எம்மைப் பூசித்த அடியார்களுக்கு விரும்பிய வரங்களைக் கொடுப்போம்'' என்று திருவாய் மலர்ந்து அம் மரங்களின் நிழலில் வீற்றிருந்தருளினார்.

விநாயகருக்குரிய அறுகு, வன்னி, மந்தாரை என்பவற்றின் பெருமை கூறத்தக்கதன்று. அறுகு கிடையாவிடின் மந்தாரைப் புஷ்பத்தாலும் இரண்டும் கிடையாத பட்சத்தில் வன்னிப் பத்திரத்தாலும் பூசிக்க.

சிவனடியாராகிய புருசுண்டி முனிவரைப் பார்த்துச் சிரித்திகழ்ந்த சமீ, மந்தாரன் இருவரும் அவரால் மரமாகச் சபிக்கப்பட்டமை தெளிக, ஆதலால் சிவனடியார்களுக்கு மறந்தும் தீங்கு நினையற்க.

## சித்தாந்தச் செந்நெறி

— மு. கந்தையா — (முற்றொடர்)

### வேதாந்தத்தில் மோக்ஷம்

வேதாந்தத்தில் சங்கராசாரிய சுவாமிகள் தரும் விளக்கத்தின் பிரகாரம் மோக்ஷம் என்பது புதுவதாக அடையப் படும் ஒன்றல்ல. அது சீவாத்மாவின் இயல்பான பண்பு என்று சொல்லத்தகும். அதனால், நாங்கள் சாதாரணமாகப் பேசுவது போல 'ஒரு சாதனத்தினால் சாத்தியமாவது மோக்ஷம்' என்று பேசுதலும் அதன் இயல்புக்குத் தகாது இடையிலே சிலகாலம் மறக்கப்பட்டிருந்த தன் சுவபாவமான இயல்பை அனுபவ ரீதியாக உணர்தலே மோக்ஷம் என்பது பொருந்தும்' 'தத்துவம் அசி' என்ற உபநிஷத மகாவாக்கியத்திற்கு 'அது நீயாய் இருக்கிறாய்' என்பதே பொருள்; அன்றி, 'அது நீ ஆகிறாய் என்பது பொருந்தாது. இதனை விளக்க பிருகதாரண்யக உபநிஷத்தில் இரண்டாம் அத்தியாயத்திற்கு எழுதிய வியாக்கியானத்தில் இதற்கு ஒரு உதாரணம் விளங்கக் கொடுக்கின்றார் சங்கரர். ஓர் அரசகுமாரன் தன் அறியாப் பருவத்தில் வேடர் கைப்பட்டு வேடராலேயே வளர்க்கப் பெறுகின்றான். அவன் தனக்குப் பருவம் வந்த போது தான் வேடர்குலத்துக்குரியவன் அன்று அரச குலத்துக்குரியவனே என்று தெரிந்து கொள்கிறான்; என்று வைத்துக்கொண்டால் இங்கே அவன் அரசகுமாரன் ஆனான் என்று சொல்வதற்கு என்ன அவசியம் இருக்கிறது. அவன் அரசகுமாரனே அரசகுமாரன்தான். பின்னை அவன் செய்ய இருந்தது என்னெனில் தான் அரசகுமாரனே என்பதை அறிந்துணரும் அவ்வளவே என்பது அவர் தரும் விளக்கமாகும். [இவ்வுதாரணம் சித்தாந்த ஆசிரியர்களாலும் தம் கொள்கை விளக்கத்திற்கு அநுகுணமானமுறையிற் கையாளப்படும் அது பற்றிய ஒற்றுமை வேற்றுமைக் கூறுபாடுகளைப் பின் அதற்குரிய இடத்திற் கவனிப்போம்]

இன்னும், இந்நிலைமையினைத் தெளிவு படுத்தி 'அது நீயாய் இருத்தல்' 'அது நீ ஆதல்' என்ற இருவகைக் கொள்கைகளின் வேறுபாட்டை விளக்குலதற்குச் சூரிய கிரகணத்துக்கும் சந்திர கிரகணத்துக்குமிடையிலுள்ள வேறுபாடு உதாரணமாகக் காட்டப்படுகின்றது. சந்திர கிரகணத்தின்போது சூரியனது ஒளி சந்திரனிற்படாவண்ணம் அவற்றின் இடையில் வருகின்ற பூமியால் சிறிது நேரம் தடுக்கப்பட்டுவிடுகின்றது. அவ்வகையில் சந்திரனை இருள் சூழ்ந்து கொள்கின்றது. இடையில் வருகின்ற பூமி அந்நிலையிலிருந்து விலகுமளவில், இருள் சூழ்ந்திருந்த அந்நிலை மாறிச் சந்திரன் மீளவும் சூரிய ஒளி பெறும் வாய்ப்பை அடைகின்றது. ஆனால், சூரிய கிரகணத்தின்போது அப்படியான தடுத்தலோ அப்படியான மறைத்தலோ நிகழ்வதாகக் கொள்வதற்கில்லை. கிரகணத்தின் போதும் சூரியன் ஒளியற்றிருந்ததில்லை. சந்திரன்போல இருளாற் சூழப்பெற்றிருந்ததில்லை. உண்மையாக அங்கே ஏற்பட்டது யாதெனில் மாற்றமில்லாமல் இருந்துகொண்டிருக்கும் சூரிய ஒளியைப் பூமியிலுள்ளோர் பார்க்கமுடியாதவாறு சிறிது நேரம் சந்திரன் பூமிக்கும் சூரியனுக்குமிடையில் நின்றுகொண்டிருந்த அவ்வளவேயாம். இடையில் நின்ற சந்திரன் விலகுமளவில் சூரிய ஒளி, (கிரணத்துக்கு) முன் பார்க்கப்பட்டதுபோலப் பின்னும் பார்க்கப்படுகின்றது. அதுவேயன்றி, சந்திரன் இரு

(5ம் பக்கம் பார்க்க)

# பௌத்த பெருமக்களின் மதப்பற்று சைவத்தையும் வளர்க்க உதவட்டும்

சமயப் பற்று மிக்கிருக்கும் முறையில் இன்று சைவ மக்கள் பௌத்த மக்களிடத்துப் பாடங் கற்க வேண்டிய நிலையுண்டு. ஈழத்தில் எப்பாகத்தில் இருப்பினும் பௌத்த மக்கள் தமது மதக் கோட்பாடுகளை மதித்து முன்னேற முயல்வதை நாம் காண்கின்றோம். ஒரு மதத்தில் அம்மதக் கடவுளுக்கு அடுத்தபடியாக மதிக்கப்பட வேண்டியவர் அம்மதக் குருமார்.

அண்மையில் பௌத்த மகாகுரவர் ஒருவருக்கு இந்நாட்டு மக்களின் மாபெருந் தலைவரான வில்லியம் கோபாலுவா (மகாதேசாதிபதி) அவர்கள் அன்னாரின் பெருமைக்குரிய திருப்பாதங்களில் மண்டியிட்டு வணக்கம் செலுத்திய காட்சி இந்நாட்டுச் சைவ மக்கள் கண்ணிலும் பட்டே இருக்கும். தினசரிகளில் வெளிவந்த படந்தான் அது. சைவ மக்களைப் பொறுத்தமட்டில் சைவக்குருமார் கௌரவிக்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. பகிரங்க பஸ் வண்டிகளில் பௌத்த குருமார்க்கென இடம் ஒதுக்கப்பட்டிருப்பதை யாவரும் அறிவோம். பௌத்த பீடத்தினர்க்கு அரசாங்க மனைகள் இராசோபசாரங்களுடன் வழங்கப்பட்டு வருகின்றன. பௌத்த குரவரின் மதச் சடங்குகள் அரசாங்கச் செலவில் இராசாங்க மரியாதைகளுடன் நடைபெற்று வருகின்றன. இவை தம் மத குரவர்க்குப் பௌத்தப் பெருமக்கள் காட்டும் பெருமதிப்புக்களாம். எமது சைவக் குருமாருக்கும் எம்மட்டில் சைவப் பெரியார் மதிப்பளிக்கின்றனர் என்று நோக்குவோம். சைவக்குருமார் பஸ், ரெயில் வண்டிகளில் வௌவாலாய்த் தூங்குகிறார்களே. அதே வண்டிகளில் எமது சைவப் பாராளுமன்றக் கௌரவ உறுப்பினர்கள் முதலாம் வகுப்பில் சொகுசாக விசேட குளிர் சாதன வசதிகளுடன் பிரயாணஞ் செய்து வருகிறார்களே. பௌத்த குருமாருக்குரிய நன்மதிப்பு நமது சைவகுருமாருக்கும் ஏன்வழங்கக்கூடாதெனப் பாராளுமன்றத்தில் குரலெழுப்பியதை அறியோமே. அவர்களுக்குத்தான் இது மனத்திற் படாவிட்டாலும் சைவச் சீர்திருத்தவாதிகளென்று தமக்கு நாமஞ்சூட்டித் தெற்கே கொழும்பு முதல் வடக்கே காங்கேசன்துறை வரைசைவக் கோட்பாடுகளைக் காலத்துக்கேற்க மாற்றியமைக்கத் துடியாய்த் துடித்துச் சங்கநாதஞ் செய்யும் பெரியார்களாவது நங்குருமார் பொருட்டுக் குரலெழுப்புகிறாரில்லையே! ஏன் இந்த ஏளனம்? நமது குருமார்க்கும் போதிய கல்வியறிவு ஒழுக்கம் இல்லை. அவர்களை ஏன் கௌரவிக்க வேண்டும் என்ற சாட்டும் வருகிறது. இது நியாயமான ஒரு வாதமே ஆயினும் சைவக் குருமாரின் அவலநிலைக்கு யார் பொறுப்பு. அவர்களா? நமது சைவச் சமூகமா? குருமாரல்ல, நிச்சயமாக நமது சமூகமே என்பது வெளிப்படை. மறுமத சமூகங்களை நோக்க உண்மை தெளிவாகும். இந்தியத் தாய் நாட்டின் சைவத் தேவஸ்தானங்கள், வேத பாடசாலைகள், குருகுலங்களாதியன அமைத்துக் குருமாரின் பண்பைப் பேண முயல்வது போன்ற நிலை ஈழச் சைவ சமூகத்தைப் பொறுத்தமட்டில் கையாளப்படவே இல்லை. சிதம்பர க்ஷேத்திரச் சூழலில் அண்ணாமலைச் செட்டிப் பெருமகனார் தம்பெருநிதி முழுவதையும் சமூகப்பணிக்கு அர்ப்பணித்ததை உலகு அறியும். அத் திறப் பெருநிதிக் கிழாரைப்போல எத்துணைப் பேர் ஈழத்துச் சைவ சமூகத்தில் உளர், அவர்கள் பணம் இப்பெரும் திருப்பணிக்குப் பயன்பட்டதா. அப்பொருட் செல்வரின் கர்மமுமன்றோ உதவ வேண்டும்.

கல்வியாதிய, வரும்போது காண்போம். நமது சைவக்குருமார் குருமாராகப் பிறக்கநிச்சயம் நல்வினைப்பயன் இருந்திருக்கிறது. சமயம் போற்றப்படவேண்டுமாயின் பௌத்த மக்கள் எப்பண்பும் நோக்காது குருமாருக்கு மதிப்புக் கொடுப்பதுபோலச் சைவமக்களும் தங்கள் குருமாருக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். அவ்வாறு மதிப்பதால் ஏற்படும் நிறைவு சைவமக்களுக்கு வாழ்க்கை இலட்சியத்தையடைய வழி செய்யும், தெய்வ நம்பிக்கையையும் வளர்க்கும். திருவருள் சித்திக்கும்.

இத்தத்துவங்களை மனத்திலிருத்திச் சைவப் பெருமக்கள் சைவகுருமாரை மதிக்கப்பழகவேண்டும். குருமாரை மதிக்கப் பழகுமுன் சைவக் கோட்பாடுகளை மதித்து அவ்வழி நாமும் ஒழுகவேண்டும் அவ்வாறு ஒழுகாதவர் சைவரேயல்லர்.

நாவலர் பெருமான் அவதரித்த யாழ்ப்பாணத்திற் பிறந்து அன்னாருக்குச் சிலையும் பெருவிழாவும் எடுத்த நாம் ஒரு சிறிதாவது சிந்திக்கக்கூடாதா நாவலர் சைவத்துக்காக எப்படி வாழ்ந்தார்? மிக இலகுவான தமிழில்சைவரறிய வேண்டிய கருத்துக்களை வேதாகமங்களிலிருந்து தமது அபாரத்திறமையால் வடித்துத் தந்தாரே! அவற்றைப் படித்தறிந்து குருமாரைவேண்டியவாறு கௌரவித்து உயர் சைவ வாழ்வு பெற முயல்வோமாக.

அ இ சை. அ. பா. சபை

# 'நஞ்சுண்பார் கள்ளுண்பவர்'

—திருக்குறள்

(ஆசிரியர் திலகம் திரு ஆ. கணபதிப்பிள்ளை)

கொலை களவு, கள்ளுக் குடித்தல் மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம் சூதாடுதல் முதலானவை பாவங்கள் - நாவலர்.

கள்ளுண்பவர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கள்ளுண்ணார் சிறுபான்மையராக, கள்ளுண்ணார் நாகரீகமற்றவர் என்று மேடையேறி மார்தட்டிக் கூறுமளவுக்கு நிலை மோசமடைந்துளது. ஒரு நாட்டின் அரசாங்கமே கள்ளையோ வேறு லாகிரித் தன்மையுள்ள குடிவகைகளையோ அந்நாட்டு மக்களுக்குச் செய்து கொடுக்கிறதென்றால் மக்களை எப்படி நல்வழிப்படுத்த முடியும். முற்காலத்தில் செங்கோல் மன்னர் ஆண்டனர். இவ்விதச் செயல்களுக்கு இடமே இருக்கவில்லை. நாட்டில் அமைதி நிலவிச் சுபீட்சம் மிக்கது. கொடுங்கோன் மன்னரது நாடு முற்கூறிய சகல பாவங்களுக்கும் உறைவிடமாய் அமைதி குன்றி வறுமை மிக்கு, நாட்டு மக்கள் கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டினும் கடும் புலி வாழும் காடு நன்றென இடம் பெயர்வது உண்டு.

வைத்தியர்கள் சில நோய்களுக்குக் கள் பரம அவுடதமென்கிறார்கள். மக்களிற் பெரும் பான்மையோர் தேடி அலைந்து அருந்திக் களிக்கின்றார்களே. கள் நஞ்செனின் அவ்வாறு வைத்தியக் கலைமாணிகள் சிபார்சு செய்வதும் அருந்துவதும் பொருந்துமாறெங்ஙனமோ? நஞ்செனின் அருந்தியவர் இறக்க வேண்டுமே. இறப்பதற்குப் பதில் ஆனைபோல் பருத்துக் காணப்படுவதெவ்வாறெனின் சொல்லுதும்.

மனிதன் புண்ணிய வசத்தால் பகுத்தறிவு பெற்றவன். மானம் அவன் உயிர் மனிதனுக்கெனச் சிறப்பாக மனிதப் பண்புகள் உண்டு. நல்ல கல்வி வாய்ப்பும் பெற்றுக் கண்ணியமாய் வாழ வேண்டியவன் கள்ளை அருந்தும்போது அதிலுள்ள போதை வஸ்து (Alcohol) அருந்துபவனை மயக்கி மனிதப் பண்புகள் செயற்படாது தடுப்பதோடு பகுத்தறிவையும் சிறிது போது செயலற்றதாக்கிப் பெரும் பிழைகள் நேரச் செய்துவிடுகிறது. சுருங்கச் சொன்னால், மானம் முதலாம் பண்புகளைச் கைவிடச் செய்கிறது. கள் அருந்தும் ஆசிரியர் தமது பொறுப்புக்களையெல்லாம் மறந்து நன்மார்க்கம் போதிப்பதற்குப் பதில் துன்மார்க்க வழிகாட்டுகின்றாரெனின் அறிவதறியாத பிறமக்கள் கள்ளுண்டு மயங்கி நிலையழிவதுசொல்லவும்வேண்டுமோ? அறிவைக் கொன்றுதான் கண்ணியமுள்ள மனிதனென்பதை மறக்கவைத்து, எது பேசுவது, எது பேசத்தகாதது, யார் சகோதரி, யார் தாய், யார் மகள், யார் மனைவி என்பதெதுவும் தெரியாது, கண்ணும் மங்கி, நாத் தழுதழுத்துத், தள்ளாடும் நிலையை, மனிதப் பண்புக் கொலையைப் புரிந்தது கள்ளெனும் பொல்லா நஞ்சன்றோ! மறுபக்கமாக இந்நஞ்சருந்தா மாண்புடையார் செயலை எடுத்தாராய்வாம் அவர்கள் மானங்காக்க உடுத்த ஆடை மானத்தைக் காத்துக் கொண்டேயிருக்கிறது. பேசுவது பண்புக் கொப்ப நிறுத்துப் பேசப்படுகிறது. தாய் தாயாகவே மதிக்கப்படுகிறாள். சோதரி சோதரியாகவே கருதப்படுகிறாள். மகள் மகளே. மனைவியிடத் தரும்பும் அளவான காதல் வேறு பெண்டிரிடத்து உண்டாவதில்லை. நிதானம் பறிபோவதில்லை.

கள்ளருந்தியவரோ தன் இயற்கைப் பண்புகள் யாவும் பறிபோக அறுபது எழுபது வயதில் இருபது வயதுடைய இளைஞனெனக்காமச் சேட்டைகள் புரிகின்றார். கள்ளருந்தும் ஆடவரினும் கேவலமாய், பண்பு தள்ளாடுவர் கள்ளருந்தும் பெண்டிர் ஆவர். அவர்கள் கற்பு என்னும் நாமமும் அற்றுத் தமது குலத்தின் நலத்தையே விற்றுவிடுவர்.

கள்ளருந்தானிடத்துப் பண்புவளர, அருந்துவானிடத்து அதன் நாமமும் கொல்லப்பட்டுவிடும். அதனைக் கொன்ற நஞ்சு இப் பொல்லாத கள்ளே. ஆதலாற்றான் மக்களினத்தை வழி நடத்தச் செய்த பொய்யா மொழியில் 'நஞ்'சுண்பார் கள்ளுண்பவர்' என எச்சரிக்கலானார் வள்ளுவர்.

வட இலங்கையில்
ஆலயப்பிரவேச இயக்கம்
அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை வெளியீடு
பிரதி ஒன்று ஆங்கிலம் - ரூபா 1-00
" " தமிழ் - ரூபா 1-00
பெறும் இடம்:
சூடாநாட்டு வர்த்தக மாளிகை.
சுன்னாகம்.

# சைவசமயம் அன்றும் இன்றும்

அ. இ. சை. அ. பா. சபை

### சைவத்தின் மாண்பு

ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியாகிய சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கைக்கொண்டு, அப்பெருமானை வழிபடுவதற்குச் சாதனமாயுள்ள சமயமே சைவசவயமெனப்படும். சைவ சமய சாதனங்களைக் கூறும் வேத சிவாகமங்களைச் சிவ பெருமானே ஒவ்வோர் கற்ப காலத்திலும் உலகம் ஒடுங்கித் தோன்றுங்காலை சதாசிவ மூர்த்தி வடிவமாகத் தோன்றி, முனிவர்களுக்கு அருளிச் செய்ய அவர்கள் மூலம் மக்கள் அவற்றை அறிந்துள்ளார்கள். இம் முதல் நூல்களின் கருத்துக்களை விரித்துரைப்பன, சந்தான குரவர்களும், சமய குரவர்களும் தந்துள்ள 14 சைவ சித்தாந்த சாத்திரங்களும். பன்னிரு திருமுறைகளுமேயாம். மேலும், புராணம், இதிகாசம் முதலியன யாவும் இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதுவே சைவ சமயத்தின் தனிச் சிறப்பெனக் கருதவேண்டும். இதிலிருந்து, எமது சமயம் இறைவனாலேயே ஆக்கப்பட்டதென்பது விளங்குகின்றது.

மறுசமயங்கள் யாவும் யோனிவாய்ப்பட்டுப் பிறந்த மக்களால் ஆக்கப்பட்டுள்ளன என்பது யாவரும் அறிந்த உண்மை. ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள பல வகுப்புக்களுக்கும் மாணவர்களை அனுமதிக்கும் பொழுது தலைமை உபாத்தியாயர் ஒவ்வொருமாணவனின் கல்வித் தராதரத்தைப் பரிசோதனை செய்து அவனுடைய தகுதிக்கேற்ற வகுப்பில்அவனை அனுமதிக்கின்றார். அதுபோல ஆன்மாக்களும் இறைவனருளால் தமது கன்மத்திற்கேற்ற பிறவிகளை எடுத்து அப்பிறவிக்களுக்கேற்ற சமயங்களிற் தோன்றுகின்றன. எல்லாச் சமயங்களையும் சைவ சமயம் அகச்சமயம்,புறச்சமயம், அகப்புறச்சமயம், எனப் பல வகுப்புக்களில் அடக்கியுள்ளது. ஆகையாற்றான் சைவ சமயிகள் புறச்சமயிகள்போல மறு சமயங்களை ஒருபோதும் நிந்திப்பதில்லை.

சைவ சமயம் தொடக்கத்தில் உலகம் முழுவதும் நிலை பெற்றிருந்தது என எமது புராணங்கள், இதிகாசங்கள் கூறுகின்றன. இதற்கு ஆதாரமாக மேல்நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், அமெரிக்கா, ஆபிரிக்கா, யாவா, சுமாத்திரா முதலிய தேசங்களில் அனேக ஆண்டுகளுக்குமுன் சைவசமயம் இருந்ததாகக் கூறுகின்றனர் இவற்றிலிருந்து சைவத்தின் மாண்பு நன்கு புலப்படும்.

### சைவத்தின் தொன்மை

சைவ சமயம் எப்போது ஆரம்பமானதென இக்காலஆராய்ச்சியாளர்களால் நிர்ணயிக்க முடியவில்லை. எனினும், சில காலங்களுக்குமுன், மேல்நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அமெரிக்காவிற் கண்டுள்ள சிவன் கோவில் ஏறக்குறைய 17,000 வருடங்களுக்கு முன் இருந்திருக்க வேண்டுமெனக் கருதியுள்ளார்கள். இதிலிருந்தே ஓரளவிற் சைவசமயம் மற்றெல்லாச் சமயங்களிலும் பார்க்க மிகப் பழைமை வாய்ந்த சமயமென்பது மிகத் தெளிவாகப் புலப்படும்.

சைவத்தின் தொன்மையைப்பற்றிச் சைவ சாத்திரங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும் ஆதாரமாகக்கொண்டு ஆராய்வோமாகில், சிருஷ்டி கர்த்தாவாயுள்ளவர் பிரமா. இதுவரை எண்ணரிய பிரமாக்கள் தோன்றி மறைந்தனரெனப் புராணங்கள் கூறுகின்றன ஒரு பிரமாவின் ஆயுட்காலத்தைப் பின்வரும் காலப்பகுப்பின்படி கணக்கிடுதல் வேண்டும். அதாவது 43,20,000 ஆண்டுகள் ஒரு சதுர்யுகம், 1000 சதுர்யுகம் ஒரு கற்பம், 2 கற்பம் ஒரு பிரமதினம், 360 பிரமதினம் ஒரு பிரமவருடம், 100 பிரம வருடம் ஒரு பிரமகாலம். ஒவ்வொரு கற்பகாலமும் உலகம் ஒடுங்கிப் பின் தோன்றும். இவற்றிலிருந்து சைவத்தின் தொன்மை நன்கு விளங்கும். மறு சமயங்கள் யாவும் 3000 வருடங்களுக்கு பின் தோன்றியுள்ளனவேயாகும்.

### சைவத்தின் உண்மை

எமது முன்னோரில் ஆத்மீகத் துறையில் உயர் நிலை அடைந்தவர்கள் எல்லோரும் வேதசிவகாமங்களிற் கூறியபடியே எமது சமய குரவர்கள் சந்தான குரவர்கள் முதலியோர் காட்டிய வழியின்படி சமய வாழ்க்கையை நடாத்தித் தமது பிறவிப்பயனாகிய முத்தியின்பத்தைப் பெற்றார்கள். இவர்களின் வாழ்க்கையே எமது சமயத்தின் உண்மை வழியை நன்கு புலப்படுத்துகின்றது. இதைவிட்டு ஆங்கில நாகரிகத்திலே திளைத்து இலௌகீகத்துறையில்உயர்ந்த பதவிகளிலிருப்போரும், அல்லது மற்றும் ஐசுவரியங்களில் மேம்பட்டோரும் தாமே இக்காலச் சமய குரவர்களெனத் தம்மைக் கருதிச் சைவ உண்மைகளைத் தூற்றி, ஒரு நவீன சைவத்தை உண்டாக்கிச் சைவ சமயக் கட்டுப்பாட்டுக் கோட்டைகளை உடைத்து, நாஸ்திக வளர்ச்சிக்குக் குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் போல் ஆதரவு கொடுக்கின்றார்கள். தாங்கள் பாவிகளாவதுமல்லாமற் பிறரையும் பாவிகளாக்குகின்றனர். இதுதான் இவர்களின் சைவப் பணி. நாவலர் பெருமானின் ஞாபகத்தை நிலைநாட்டச் சிலையெழுப்பும் பிரமுகர்கள், அவர் காட்டிய வழியைப் பின்பற்றாது அவரை நிந்திக்கின்றார்கள். என்னே இவர் மடமை!

### சமயம் சைவமன்னர்களாற் காத்து வளர்க்கப்பட்டது

முற்காலத்தில் சைவசமயம் வளர்ந்து உயர்நிலைபெற்று நிலவி நின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. இதற்குக் காரணம் யாதெனின், சைவமன்னர்களே சமய வாழ்க்கையிலும், வளர்ச்சியிலும் மிகச் சிரத்தையெடுத்துச் சைவத்தைப் பேணிக் காத்து வளர்த்து வந்தார்கள். ஆலயங்கள் நிறுவி, நித்திய நைமித்திய பூசைகள், உற்சவங்கள் கிரமமாகச் சிவாகம முறைப்படி நடைபெறச் செய்வதிற் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். தமது நாட்டில் ஏதும் துன்பம் நேரிடுங் காலமெல்லாம், இறைவழி பாட்டில் ஏதாகிலும் இடையூறு ஏற்பட்டதா என்ற கேள்வியையே அடிப்படையாகக் கொண்டு சமயத்துறையில் அத் துன்பங்களை நீக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வந்தார்கள்.

அவர்களின் பின்னர், அந்நிய அரசாங்கங்களின்கீழ் சைவத்திற்குப் பலவித இடையூறுகள் ஏற்பட்டு அவற்றின் காரணத்தால் சீர்குலைந்து தேய்ந்து நிற்குங் காலையில், ஈழத்தில் ஆறுமுகநாவலர் பிரான் தமது விடா முயற்சியால் தீயசக்திகளிற் கெதிரே போராடி ஓரளவிற் சைவத்தைப் பேணிக்காத்து வளர்த்து வந்தார். இதனால் அந்நிய அரசாங்கத்தின் தீய கொள்கைகளும் மாற்றமடைந்து சைவத்திற்குரிய ஆபத்துக் குன்றியது. இருந்தும் இடர் ஏற்படுங் காலமெல்லாம் சைவப் பற்றுள்ள எமது அரசியற் பிரதிநிதிகளாகிய சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற சைவப் பெரியார்கள் அரசாங்க சபைகளில் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துச் சைவத்தைச் சிதைவுறாவண்ணம் காத்து வந்தனர்.

### இப்போது உள்ள நிலைமை

இதன் பின்னர், நாம் அரசியலிற் சுதந்திரம் பெற்றதும், ஈழத்திற் பெரும்பான்மையினராகிய சிங்களச் சகோதரர்கள் தமது சமயத்தை வளர்ப்பதிலே தீவிர முயற்சி எடுத்து வருகின்றார்கள். இதற்குஇலங்கைமக்களின் பொதுப் பணத்திலிருந்துமிகஏராளமான பணத்தைச் செலவழித்துக்கொண்டு வருகின்றனர். இச் சூழ்நிலையிற் சைவத்தைப்பேணிக் காக்கக்கூடிய பிரதிநிதிகள் எமக்குப் பாராளுமன்றத்தில் இல்லாத காரணத்தால் சைவம் இன்று ஓர் அனாதைப் பிள்ளை போலிருக்கின்றது. அதுவுமன்றிச் சில அரசியல் கட்சியினர் எமது சமயத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தாழ்ந்த சாதியினரின் இப்போது நடைபெறும் ஆலயப் பிரவேசப் போருக்கு உதவியாயுள்ள தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்திற் கொண்டு வரும்படி கேட்டுக் காலஞ்சென்ற திரு. இராஜவரோதயம் அவர்கள் ஓர் பிரேரணையை 1956 ஆம் ஆண்டிற் கொண்டுவந்தார். அப் பிரேரணையைக் காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கம் அவர்கள் ஆமோதித்தார். இதன் காரணமாகக் காலஞ்சென்ற பிரதம மந்திரி பண்டாரநாயக்கா இப்போது உள்ள தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் 1957ஆம் ஆண்டு கொண்டு வந்து நிறைவேற்றினார். இதனால் வைதிகச் சைவர்கள் ஈழத்தில் வாழமுடியாது துன்புறுகின்றனர். தகுந்த சைவப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிராது எதிர் வருங் காலங்களில் நாம் விழிப்புற்று எமது சமயத்தைக் காக்கக் கூடிய பிரதிநிதிகளையே பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். சைவ மக்கள் எல்லோரும் இதிற் சிரத்தை கொள்ளாவிட்டால் எமது சமயத்திற்கேற்பட்டுள்ள துன்பமும் இடுக்கணும் அதிகரித்துக்கொண்டே வரும். மிக மிகச் சிறுபான்மையினராகிய நவீனச் சைவர்களினதும், நாஸ்திகர்களினதும், புறச்சமயிகளினதும் கொடுமையால் வைதிகச் சைவர்கள் ஈழத்தில் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் இன்னும் உணரவில்லைப் போலும்.

### சைவ அரசாங்கம் உலகில் இல்லை.

உலகில் எல்லாச் சமயங்களுக்கும் அவ்வச் சமயங்களைப் பேணிப் பாதுகாக்க அரசாங்கங்கள் இருக்கின்றன ஒரு காலத்தில் உலகம் முழுவதும் நிலவி நின்ற சைவ சமயத்திற்கு அதைப் பேணிக் காக்க ஒரு தனி அரசாங்கம் முன் இருந்ததுபோல் இல்லாதது வருந்தத்தக்கது உலகில் அப்பேர்ப்பட்ட ஓர் சைவ அரசாங்கம் கருவாகி, உருவாகி நிலைபெறுங் காலத்திற்றான் சைவத்தின் மாண்பு திரும்பவும் ஒளிபெறும். இதற்குப் பிரார்த்தனையே வேண்டும்.

## சித்தாந்தச் செந்நெறி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ளாற் சூழப்பட்டிருந்து இருள் நீங்கிப் பின் ஒளிபெற்றது போன்ற ஒருதன்மை சூரிய கிரகண நிகழ்ச்சியில் இல்லையாகும். இங்ஙனம் சந்திர கிரகணத்துக்கும். சூரிய கிரகணத்துகும் உள்ள வேறுபாடு போலவே 'அது நீ ஆதல்' என்பதற்கும் 'அது நீயாய் இருத்தல்' என்பதற்கும் உள்ள வேறுபாடு கொள்ளப்படும். ஆகவே சூரிய ஒளி தோன்றாமல் இடையில் நின்ற சந்திரன் விலக அவ்வொளி பூமிக்கும் மீளத் தோன்றியது போல, பிரமத்தின் பிரகாசம் தோன்றாமல் இடையில் நின்ற அஞ்ஞான நிலை நீங்கச் சீவாத்மா பழையபடி பிரமத்தின் ஒளியைப் பெறுதலே வேதாந்தத்தில் பிரதிபாதிக்கப்படும் மோக்ஷமாகும்.

இனி, அந்த அஞ்ஞான நிலை நீங்குதற்கு ஏற்ற உபாயம் ஞானப்பேறாகும். அந்த ஞானமும் நேர்முக ஞானமாயிருத்தல் வேண்டும். அஃதாவது ஒருவன் தனது பொறிபுலன்களின் உதவியால் அல்லது அந்தக் காரணங்களின் வியாபகத்தினால் அல்லது உள்ளத்தின் உன்னுதலால் பெறும் ஞானமாயிருத்தல் பொருந்தாது. இவையெல்லாவற்றுக்கும் உள்ளீடாக இருக்கின்ற உண்மையான உயிர் எதுவோ அதுதானே நேரடியாகப் பெறும் ஞானமாதல் வேண்டும். அத்தகைய ஞானம் 'சாக்ஷாத்கார ஞானம்' என்று பெயர் பெறும். வேதாந்தக் கருத்தின்படி, அந்தரக் கரண வியாபகத்தினால் நிகழும் ஞானம் விருத்தி ஞானம்; உள்ளத்தின் உதவியினால் நிகழும் ஞானம் சாக்ஷி ஞானம் இவையெல்லாவற்றுக்கும் உள்ளாக இருக்கும் சீவாத்மாவினால் தன்னளவில் உணரப்படும் ஞானம் பிரஹ்மஞானம் எனப்படும். இப்பிரஹ்ம ஞானமே சாக்ஷாத்கார ஞானம்; அதுவே சீவாத்மாவும் பிரமமும் ஒன்றென்னும் நிலையை அளிக்கவல்லது. ஆதலால், பிரமமும் தானும் ஒன்றென்னும் நிலையை உடலில் உள்ள சீவாத்மா மறந்துபோன ஒன்றே அதற்குச் சம்சார பந்த நிலையை உண்டுபண்ணிற்று என்று சாக்ஷாத்கார ஞானத்தினால் உணரும் அவ்வளவே விடுதலைக்கு வழியாகும் என்பது துணிபு.

இத்தகைய சாக்ஷாத்கார ஞானநிலையை எய்துவதற்கு ஒழுக்கச் சிறப்பும் சமய ஆசார அநுட்டானக் கடைப்பிடியும் அவசியமானவை. சீவாத்மாவிடத்தில் இடம் பெற்றுள்ள இச்சை முதலாய தீய இயல்புகளைக் கெடுத்து சம்சார பந்தத்திலிருந்து விடுபடுதற்கு ஏற்ற அளவு உரமான சங்கற்ப வலிமையை ஏற்படுத்துதற்கு ஒழுக்கமும் சமயாசாரமும் மிக மிக வேண்டப்படும்.

(தொடரும்)

## தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் பக்திஞானவளம் மலிந்த

# மெய்கண்டார் விழா

வாயிலில் விளம்பரம் வரவேற்பு அப்படியான சம்பிரதாயங்கள் எதுவும் இருந்ததாகத் தோன்றவில்லை. யார் யார் வந்திருக்கிறார்கள் என்ற விசாரணையும் இல்லை. அவரவர் நியதிக்கு வந்து சேர்ந்தவர்கள்போல எல்லாரும் தத்தம் போக்கில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்குள் நுழைந்தார்கள். ஆம்! அன்று (9-11-69) ஐப்பசிச் சுவாதித் திருநாள் மெய்கண்டார் சிவபதமெய்திய தினம்.

வைத்தீஸ்வரன் கோயிலில் அன்றைய காலைச் சந்தி ஆராதனை முடிந்ததே தாமதம், எல்லோரும் பாலாம்பிகை சந்நிதியை நோக்கி விரைகின்றார்கள். சந்நிதிக்கெதிரே தீர்த்த மண்டபம். சொர்ண புஷ்கரணி தீர்த்தம் நிர்மலமாய்க் காட்சியளிக்கின்றது. அதன் வட ஓரத்தே நெடுஞ்சுவரருகே நீண்டு கிடந்த சிவ பூசைக்கட்டு எல்லோர் கண்ணையுங் கருத்தையும் ஒருங்கே கவ்விக்கொள்கின்றது பசுச்சாண மெழுக்கின் பசுமையறாத பசுநிலத்தில் சகல பூஜோப கரணங்களும் இனத்துக்கினம் பலபல வாய்ப் பொலிந்திருக்கின்றன. வைத்தீஸ்வரப் பெருமானின் ஐம்முகங்களோ என்னும்படி ஐந்து சாதனையாளர்கள் பத்மாசனமிட்டுப் பாவனா சகிதமாக உட்கார்ந்து கொள்கின்றனர்.

தானசுத்தி, பீடசுத்தி, இலிங்க சுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்திகள் மளமளவென்று நடைபெறுகின்றன. ஐவரும் மந்திரம் தியானம், பாவனைகளில் மாறிமாறித் தம்மையிழந்திருக்கின்றனர். ஆராதனைகளும் அர்ச்சனைகளும் அவரவர் இதத்திற்கேற்ப நடைபெறுகின்றன. எல்லோர் அகத்திலும் தலைதூக்கிய ஆத்மீக அமைதி முகத்திலும் பிரதிபலிக்கின்றது. வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டேயிருந்தவர் பலர், பார்வையளவில் ஆராமை மேற்கொண்டு சாந்தோக்கியமும், சிவபுராணமும், தேவாரப்பதிகமும் முணுமுணுத்துக் கொண்டவர்கள் சிலர். அனைத்துவகையாலும் ஆராமை மீக்கூர அகம்பொங்கி முகஞ் சிவந்து விதுவிதுப்புற்றோரும் ஒருவர் இருவர். ஆம்! சிவபூசையின் சீர்மையும் நேர்மையும் ஒரு அறுபது நிமிடங்களுக்கு அச்சூழலை அதிட்டித்துநின்றது உண்மை. எல்லாமாக அவ்விடத்திலே குடிகொண்டிருந்த அமைதியானது 'எல்லாமாய் அல்லவுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டி' என்ற வாக்கியப் பொருளை எடுத்துக் காட்டுவது போல இருந்தது.

காட்டுவது போல இருந்தது என்பானேன்; காட்டியேவிட்டதெனலாம். சிவபூசை முடிந்ததுதான் தாமதம். சம்பந்தப்பட்ட அனைவரும் அங்குள்ள தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிற் சரசரவென்று சென்றடைகின்றனர். திவ்வியாபிஷேக திரவியப் பொலிவினால் மிளிர்கின்றது தக்ஷிணாமூர்த்தி சந்நிதி. தவவேடப் பொலிவொடு தோன்றிய தம்பிரான் சுவாமிகளும் சந்நிதியில் அமர்ந்து கொள்கின்றார். சர்வத்திரவியாபிஷேகமும் சர்வாலங்கார தீபாராதனா பூசையும் தக்ஷிணாமூர்த்தியின் தண்ணளியைச் சகல இருதயங்களிலும் ததும்ப வைக்கின்றன.

பிரசாதம் பெற்றுக்கொண்டதும் சந்நிதியிற் சகலருந்தாள்மடித்து அமர்ந்து கொள்கின்றனர். ''பாட்டின் தொடையாகி....'' என்று தம்பிரான் திருவாயிலெழுந்த தேவார ஒலி அனைவர் திருவாய்களிலுஞ் சென்று சென்றொலித்துச் சிறப்பெய்திற்று. தேவார ஒலியைத்தொடர்ந்து சிவஞான போத சூத்திரங்கள் பன்னிரண்டுஞ் செவ்வீதின் ஒலிக்கின்றன. விநயானுபூர்வமாக எழுந்தொலித்த தம்பிரானின் ஆசியுரையைத் தொடர்ந்து விழாத்தலைவர் அவர்கள் 'சிவஞானபோதச் செம்பொருள்' என்னுந் தலைப்பிற் சிக்கன பரமான தெளிவுரையொன்று வழங்கினர்.

இரண்டரை மணித்தியாலங்களுக்கிடையில் இங்ஙனம் இரத்தினச் சுருக்கமாகவும் உணர்வின்பப் பெருக்கமாகவும் நடைபெற்ற இவ்வைபவத்திற் கர்மம், பக்தி, ஞானம் மூன்றும் கைகோத்துக் களிநடம் புரிந்தவாற்றைக் கண்டவர் கண்டவரே. கண்ட திருப்தியோடு எல்லாத் திருவாய்களிலும், 'பொய்கண்டகன்ற மெய்கண்டநாதன்,' 'பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதாந்த மெய்ப்பொருளாம்—மெய்காட்டும் மெய்கண்டான்' என்ற உச்சாரணத்தோடு எல்லோருந் தம்மிற் கலந்தனர்.

இனி, உலகியலோடும் ஒத்தியல்க என்பதுபோல அடுத்தநாள் (10-11-69) பிற்பகலிலும் மெய்கண்டார் விழாவின் சார்பிற் சில நிகழ்ச்சிகள் இடம்பெறுவனவாயின. நாதஸ்வர மங்கல இசையுடனாரம்பித்த இவ்வைபவத்தில் காரைநகர் மாதர் ஆச்சிரமத் தலைவியார் தலைமையில் 'சைவ சித்தாந்தப் மத்திநெறி' என்னும் விஷயத்திலும், மெய்கண்டார் கழகத்தலைவர் தலைமையில் 'சைவசித்தாந்த தத்துவநெறி' என்னும் பொருளிலும் காலமிடம் என்பவற்றுக் கியையக் கணிசமான அளவு சுருங்கியமுறையிற் கருத்தரங்குகள் இடம்பெற்றன. பக்தியின் மேன்மை கண்டார். திருவவதாரதத்துவ தரிசனத்திற் பெற்றுள்ள முக்கியத்துவம், மெய்கண்டார் கூறிய ஆன்மவிலக்கணம் உளநூலாராய்ச்சிக் கருத்துகளோடும் ஒத்தியலுந்திறம் என்பன கருத்தரங்கின் தலைமையேற்ற இருபெருந்தகையினரும் மெய்கண்டார் மேன்மையினையும், சைவசித்தாந்த அநுபூதிச் சிறப்பினையும் தகுந்த அளவு உற்றுணரத் தந்தனர்.

இக்கருத்தரங்கினைத் தொடர்ந்து திருமுறைப்பண்ணிசையும் கதாப்பிரசங்கமும் இடம்பெற்றன.

ஆன்றவிந்தடங்கியகொள்கைச் சான்றோர்களாகிய சமயப் பெரியார்களின் நினைவு தினங்கள் இயன்ற அளவுக்கு அடக்கமாகவும் அமைதியாகவும் பேச்சாற் சுருங்கிச் செயலாற் பெருகியமைவனவாகவும், பக்தி, கர்மம், ஞானம் மூன்றும் ஒன்றியைந்தனவாகவும் கொண்டாடப் பெறுமாயின் அவை நிச்சயம் பயன்படுங் கொண்டாட்டங்களாயமையும் என்றபரம திருப்தியுடன் மெய்கண்டார் விழா இனிது நிறைவெய்திற்று.

நமது யாழ் நிருபர்

---

**அகில இலங்கைச் சைவ அநுட்டான பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுக்கு**

ஐயன்மீர்!

அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கு. மனமிருந்தால் இடமுண்டு. சபைகள் பல மின்னல் வேகத்தில் தோன்றி மறைகின்றன. சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை அவ்விதமன்று மாவை ஆலயத்தில் தோன்றி நகுலேஸ்வரத்தில் வேரூன்றி நிற்கின்றது. சைவத்தையுந் தமிழையும் வளர்ப்பதற்குச் சிவபெருமான்தானே இதுதான் வழி என்று சைவகாவலன் பத்திரிகையைப் பரப்பும் வழியைக் காட்டியருளியிருக்கிறார். சிவதொண்டர்களில் ஒருவராயும், சபையின் உறுப்பினர்களுள் ஒருவராயும் உள்ள தாங்கள் இயன்றளவு சந்தாதாரர்களைச் சேர்த்து இச்சிவதொண்டை வளர்க்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

சைவ அன்பர்.

# தீண்டாமையும் விஞ்ஞான ஆராய்ச்சியும்

— தம்பிப்பிள்ளை சிவலிங்கம் —

(சுவாமி பாரதி கிருஷ்ணதீர்த்தா அவர்களின் 'சனாதனதர்மம் என்னும் நூலை ஆதாரமாய்க் கொண்டது.)

(முற்றொடர்)

டாக்ரர் ஏணெஸ்ற் ஏபிரகாம் அவர்களின் இரத்தத்தைப்பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி இன்று மிகவும் உன்னத நிலையை அடைந்துவிட்டது. இலங்கையிலிருந்து அல்லது வேறு எந்தத் தேசத்திலிருந்தும் சரி ஒரு மனிதனின் தேகத்திலிருந்து ஒரு துளி இரத்தத்தைச் சிக்காக்கோவிலுள்ள இரத்த ஆராய்ச்சி தாபனத்திற்கு அனுப்பினல் ஆராய்ச்சியின் பின்னர் அந்த இரத்தத்தை உடையவரின் விபரங்களை மிகவும் விரிவாகத் தெரிவிப்பார்கள் என அறிகிரோம். அதாவது அவர் எந்தத் தேசத்தில், என்ன இனத்தில், என்ன வகுப்பில் (சாதியில்) உள்ளவரென்றும்; அவரின் மயிரின் நிறம், முதலியன இன்னவாக இருக்குமெனவும் தெரிவிப்பார்கள்.

அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்ட அளவைக் கருவி (Oscillameter) ஆட்டப் படவரைகருவி (Oscillagraph) ஆட்டக் குறிப்புக் கருவி (Oscillascope) முதலிய கருவிகள் எங்கள் சமயங்கள் வரையறுத்துள்ள சமூக ஒழுக்க நிலைகளிலிருந்து தவறினவர்களின் ஒழுக்கவீனத்தையும் காட்டிக்கொடுக்கும்கருவிகளாயிருக்கின்றன. ஒரு முறை ஒருவர் ஓர் சொத்துரிமை வழக்கில் தனது தம்பி தனது தகப்பனின் சொத்துக்களுக்கு உரிமையற்றவரென வாதாடினுர். ஏனெனின் தம்பியார் தனது தாயின் புத்திரனுயிருந்தபோதும் தமது தகப்பனின் புத்திரனல்ல என்பதே அவர் கட்சி. இதை நிரூபிக்கக்கூடிய சாட்சி இல்லாவிடத்தில் இதிற் தொடர்புள்ளவர்களின் இரத்தங்களை மேற்குறிக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு ஆராய்ச்சி பண்ணியபொழுது வழக்காளி சொன்ன பிரகாரம் தம்பியார் வழக்காளியின் தகப்பனின் புத்திரனல்ல என நிரூபிக்கப்பட்டது.

ஒருவரின் இரத்தத்துடன் தொடர்பாயுள்ள வியர்வையின் மணத்தைக் கொண்டு சிலர் சாதியைக் குறிப்பிடக் கூடியவர்களாயிருக்கின்றனர். இரத்த வேறுபாட்டின் அடிப்படையைக் கொண்டே கொலை முதலிய குற்றங்களைச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்குப் பொலிஸாரின் நாய்கள் உதவுகின்றன.

இரத்தத்தைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி உண்மைகள் வெளிவர முன்னர் கூட அநுபவப் பிரமாணத்தைக் கொண்டு எம் முன்னேர் இரத்தக்கலப்பு நேரிடா வண்ணம் மிகவும் அவதானித்து நடந்து வந்தனர். உதாரணமாக, சில காலங்களுக்கு முன்னர் ஒரு நோயாளிக்கு இரத்தம் கொடுக்க வேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்தால் அந்நோயாளியின் குடும்பத்தவர்களிலொருவர் முன்வந்து அல்லது அச்சாதியினரின் ஒருவர் முன்வந்து இரத்தம் கொடுத்துதவுவது வழக்கமாயிருந்தது. இது இயற்கையாகவே தமது இனத்தின் இரத்தத்தராதரம் ஒவ்வொரு வகுப்பிலும் (சாதியிலும்) குன்றுமலும் அதனுற் குணங்கள், செயல்கள் முதலியன குன்றுமலும் பேணிக் காக்கும் முறையாயிருந்தது. இப்போது இக்கட்டுப்பாட்டைத் தளரவிட்டுத் தாழ்ந்த சாதியினரின் இரத்தத்தையும் உயர் சாதியினரின் பிரதானமாகப் பெண்கள் தேகத்திற் செலுத்திய பின்னர் கருவாகிப் பிறந்த குழந்தைகளின் குணங்கள், செய்கைகள் குடும்பத்தவர்களின் குணங்கள் செய்கைகளிலும் பார்க்கத் தராதரம் குன்றியிருக்கக் காணலாம். அதுமாத்திரமல்ல அக்குடும்பத்திலொருபோதுமில்லாத அளவுக்குக் கொலை முதலிய மகாபாதகங்களைச் செய்யும் மனிதராகவும் வந்துவிடக்காண்கிறேம். இதைவிட ஆண் பெண் இருபாலாரிடத்தும் ஒழுக்கநெறி குன்றுவதாலும் சாதிச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

ஒரு வயது முதிர்ந்த உயர் சாதிப்பெண்ணுக்கு அவரின் நோயைக் குணப்படுத்துவதற்கு இரத்தச் சிகிச்சை கொடுக்க வேண்டியிருந்தது. அதற்கு அவ்வூரிலுள்ள தாழ்ந்த இரத்தத் தராதரம் உள்ள ஒருவரின் இரத்தம் பொருத்தமாயிருந்தது. சிகிச்சைமுடிந்ததும் செல்வந்தராயுள்ள அப்பெண் இரத்தங் கொடுத்துதவியவருக்கு ரூபா 50/– சந்தோஷமாகக் கொடுத்தார். திரும்பவும் மூன்று மாசங்களின் பின்னர் அந்தச் சிகிச்சை செய்யவேண்டியிருந்தது. முன் இரத்தங் கொடுத்தவரே இம்முறையும் வந்து உதவியுள்ளார். அவ் வுதவிக்குக் கொடுத்த பணம் ரூபா 10/– திரும்பவும் ஒரு முறை சிகிச்சைக்கு உதவிய பொழுது முன் தந்தது போதாதா இன்னும் பணம் வேணுமா என்ற கேள்வி ஏற்பட்டுவிட்டது. இத்தகைய நன்றியீனமான கேள்விக்குக் காரணமென்னவெனின் முதல் இரத்த சிகிச்சை பெற்ற பொழுது அப்பெண்ணின் இரத்தத்தின் சுயகுணம் செய்த நன்றிக்கு மதிப்புக் கொடுத்துள்ளது. திரும்ப தாழ்ந்த தராதரம் உள்ள இரத்தங் கலக்க உயர்ந்தஇரத்தத்தின் இயற்கைக் குணங்கள் குன்றிவிட்டன. வாழ்க்கையில் எமக்கு முன் தோன்றும் குண வேறுபாடுகளை இந்த நெறியிற் சிந்தித்தால் நாம் முன் செய்த கன்மத்திற்கேற்றவாறு இவை யாவும் வந்து நேரிட்டுத் தொழிற்படுகின்றன என்பதை உணரலாம்.

மேலே குறிக்கப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி உண்மைகளைப் பிரதானமாகப் பள்ளிக்கூட மாணவர் மாணவிகள் சிந்தனைக்கெடுக்க வேண்டும். எல்லாச் சாதியினரின் இரத்தங்களும் ஒரே நிறந்தானே. சாதி வேறுபாடுகள் போல் இரத்த வேறுபாடுகளில்லையே எனக் கூறுபவர்க்கு இவ் உண்மைகள் ஒருமன அதிர்ச்சியை உண்டாக்கிக் காம மயக்கத்தினுல் ஏற்பட்ட பொய் அறிவை அகற்றி மெய் அறிவைக் கொடுத்து ஒவ்வொருவரும் தமது குலத்திற்கு ஈனம் ஏற்படா வண்ணம் தம் ஒழுக்கத்தைக் காக்கும் நிலைமை உண்டாகும். எல்லாச் சாதியினரும் ஒருவர் மேலொருவர் அன்பு காட்டி நடந்துகொள்ளலாம். ஆனுல் இவ் அன்பைக் காதல்மயக்கமாகத் தக்க ஆராய்வின்றி மனம் போன போக்கெல்லாம் விடாது காக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

(தொடரும்)

## மரணச் சடங்கில் திருமுறை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிதிர்கடன் செய்யாமையால் தமது வாழ்க்கையில் அல்லடைகின்றனர். பிதிர் சாபம் பெரிய சாபம் என்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரின் அந்திய காலத்தில் திருப்பாடல்களைப் படிப்போரும்படிப்பிப் போரும் மரித்தவரின் ஆன்மா ஈடேறுவதற்கு உதவி புரிவது மன்றித் தாமும் அந் நல்வினையால் நற்பலனை இவ்வுலகிலும் அடைவர்.

அந்தியகாலத்தில் திருப்பாக்களைப் படிக்கும் வழக்கம் சிலகாலம் மேல்நாட்டு நாகரீகத்தின் அதிர்ச்சியால் குன்றி நின்றது ஆனுல், இப்போது அவ்வழக்கம் பெருகிவருகின்றது. குன்றிய காலத்தில் அது சீர்குலைந்து நின்றமையால் சான்றேர் இத்துறையிற் கையாண்ட மரபு அற்றுவிட்டது. ஆகையால் இப்போது அந்திய காலப்பாக்கள் படிப்பவர்கள் தத்தம் சமய அறிவின் பக்குவத்திற்கேற்ற முறைகளிற் படிக்கும் இடத்திற்கும், காலத்திற்கும் பொருத்தமற்ற பாக்களையும் படிக்கின்றனர். இப்பேர்ப்பட்ட ஒழுக்கமற்ற செய்கையாலும், படிப்பவர்கள் சமயாசாரமற்றவர்களாயும், மது அருந்திவிட்டும் சங்கீதக் கச்சேரிசெய்யும் முறையிலும் படிப்பதாலும், படிப்பதன் பலனுங்குன்றி எமது சமயத்திற்கும் இழுக்கேற்படுகின்றது.

முன்னர் கூறியவாறு ஆன்மா உடம்பை விட்டுநீங்கும் காலத்தில் அதை இவ்வுலகப் பற்றில் நின்றும் நீக்கி அது ஈடேறும் வண்ணம் அவ்வான்மாவின் பற்று எல்லாம் வல்ல இறைவனிலேயே நாடி நிற்கவும், அத்துடன் உயிர் உடம்பைவிட்டு நீங்கியமையால் வருந்தும் உற்றுர் உறவினர்கள் மனம் சாந்தியடையும் பொருட்டுமே திருப்பாடல்கள் படிக்கப்படுதல் காண்க. ஆகையால், முதலில் ஆத்ம சாந்திக்குரிய திருமுறைகளைப் பாடி, அதன்பின்னர் உற்றுர் உறவினர் மனச் சாந்திக்கேற்ற பாக்களைப்படிப்பது மரபு. எல்லாத் தேவாரங்களும் மரணவீட்டிற்குப்பொருத்தமானவையாயிருக்கா. திருப்பாக்களைப் படிக்கும் பொழுது அவற்றை எளிதில் விளங்கி இறைவன்பால் மனதைச் செலுத்தச் செய்யும் கருத்தமைந்தனவும், வாழ்க்கைப் பொருளுள்ளனவும் மரித்தோரின் உற்றுர் உறவினர் மனச்சாந்தியடையும் வகையில் வாழ்க்கை அநித்தியம் என்னும் கருத்தையுடையனவாயுமுள்ள திருப்பாக்களே பொருத்தமுடையன, வாயிருக்கும். சில திருப்புகழ், பட்டணத்தடிகள் பாடல்களும் பொருத்தமுடையன, திருமுறைகள், மற்றும் திருப்பாக்கள் படிப்போர் படிக்கும் மரபுதவறு ஆசார சீலர்களாய்ப் பக்தியுடன் படித்தல் உத்தமம். பாக்களுக்குப் பொருந்தக்கூடிய அரிகாம்போதி, மோகனம், தன்னியாசி, முகாரி, யதுகுல காம்போதி முதலிய சோக ரசனையுள்ள இராகங்களிற் படித்தல் விரும்பத்தக்கது. படிக்குங் காலத்தில் எல்லோரும் அமைதியாயிருந்து ஆத்ம சாந்தியை மனத்திற்கொண்டு திருப்பாக்களைக் கேட்கவேண்டும். எல்லாவிதத்திலும் மரணச் சடங்குகளில் அமைதி நிலவச் செய்தல் வேண்டும்.

அ.இ.சை.அ.பா.சபை

பத்திராதிபர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அச்சுவேலி. கந்தரோடையில் வசிக்கும் பிரம்மஸ்ரீ சி. கனகசபாபதி ஐயர் அவர்களால் சுன்னுகம் கலாதேவி அச்சகத்தில் 15-11-69இல் அச்சிட்டு சுன்னுகத்தில் வசிக்கும் அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் J.P. அவர்களால் வெளியிடப்பெற்றது.